1970 மார்ச் 30]

51. நகரமைப்புத் திட்டங்களுக்காக உள்ளாட்சி மன்றங்களுக்குக் கடன் வழங்குவதன்மூலம் நிதி உதவியளிக்க 1970-71 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 2·00 லட்சம் வகை செய்யப் பட்டுள்ளது. அரசு வழங்கும் உதவி மட்டுமின்றி, நிதி வசதிகொண்ட நகராட்சிகளும் அவற்றிடமுள்ள நிதியை நகர அமைப்புப் பணிகளுக்குப் பயன்படுத்துகின்றன. இச் செலவை, நகராட்சிகள் நேரடியாக ஏற்றுக் கொள்கின்றன. இச் செலவு, மாநிலக் கணக்குகளில் காட்டப்படுவதில்லை.

52. இம்மானியக் கோரிக்கையை ஏற்குமாறு இம்மன்றத்தினை வேண்டுகிறேன்.

இணைப்பு IV

[257-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க].

கோரிக்கை 38.—பொதுச் சுகாதார மூலதனச் செலவு.

கீழ்க்காணும் இனங்கள் இந்த மானியக் கோரிக்கையில் அடங்கும் —

		(ரூபாய்)
(i)	a. பணிகள்	30,23,000
(ii)	b. உதவி மானியங்கள்	—1,26,200
(iii)	c. வளர்ச்சித் திட்டங்கள்	30,000
(iv)	d. கழிக்கவும்—"30. பொதுச் சுகாதாரத்திற்கு" மாற்றப் பட்ட மூலதனச் செலவு.	—3,000
	மொத்தம் வாக்களிக்கப்பட்டது.	29,23,800
	கூட்டுக—வசூல்-வாக்களிக்கப்பட்டது.	1,29,200
	மொத்தம்-பெருமொத்தக் கோரிக்கை.	30,53,000

(a) இனம் (i)—a. பணிகள் (ரூ 30,23,000).

நகராட்சிகள், ஊராட்சிகள் ஆகியவற்றின் நீர்வழங்கு திட்டங்களையும் கழிவுநீர்க் கால் திட்டங்களையும் விரைந்து நிறைவேற்றும் பொருட்டு, வெளி அங்காடிகளில் எளிதில் கிடைக்கப்பெறாத குழாய்களையும் பிற கருவிகளையும் தேவையான அளவிற்கு அரசு வாங்கி, இருப்பில் வைத்து வருகிறது. நீர் வழங்குதல், கழிவுநீர் அகற்றுதல் ஆகிய வேலைத் திட்டங்களுக்காகப் பயன்படுத்தப்படும் குழாய்கள் முதலியன குறித்த செலவு, சரிக்கட்டல் மூலம், சம்பந்தப்பட்ட வேலைத் திட்டங்களுக்குப் பற்றாக எழுதப்பட்டு, அந்தந்த உள்ளாட்சி மன்றங்களிடமிருந்து வசூலிக்கப்படும். இருப்பு கரையக்கரைய அவ்வப்போது நிறைவு செய்யப்படும்.

(b) இனம் (ii)—உதவி மானியங்கள் (ரூ—1,26,200).

சென்னை மாநகராட்சி நிறைவேற்றும் நீர் வழங்குத் திட்டங்களுக் காகவும் வழங்கப்பட்ட உதவிமானியங்கள் குறித்த செலவினம், 1956-57, 1957-58-ம் ஆண்டுகளில் தொடக்கத்தில் மூலதனக் கணக்கிலிருந்து சரிகட்டப்பட்டது ; இச் செலவுத் தொகையை மூலதனக் கணக்கிலிருந்து 15 ஆண்டுகளில் வருமானக் கணக்கிற்கு மாற்றி எழுதப்படவேண்டு மென்று ஆணையிடப்பட்டது. இத் தொகை, ஆண்டுதோறும் மாற்றப்படு வதற்கான 1970-71-ம் ஆண்டுக்குரிய தொகையைக் காட்டுகிறது.

"30. பொதுச் சுகாதாரம்" என்பதன் கீழ் இதற்கு நிகராகச் செலவு காட்டப்பட்டுள்ளது.

(c) இனம். (iii)—c. வளர்ச்சித் திட்டங்கள் (ரூ. 30,000).

1966, டிசம்பர் திங்களில் நாங்குனேரி ஊராட்சிக்குக் குடிநீர் வழங்கும், திட்டத்திற்கு ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இப்பணி நிறைவேறி வருகிறது. இத் திட்டத்திற்காகும் செலவினைச் செய்ய நாங்குனேரி ஊராட்சிக்கு மானிய உதவி வழங்குவதன் பொருட்டு ரூ. 30,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

(d) இனம். (iv)—d. கழிக்கவும்—

"30. பொதுச் சுகாதாரம்" என்பதற்கு மாற்றப்பட்ட மூலதனச் செலவு (ரூ. 3,000).

கிராம நீர் வழங்கு (அடங்கல்) வேலைத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப் படும் பணிகளுக்கு, அவற்றின் மூலம் பயனடைபவர்களிடமிருந்து திட்டத்திற்காகும் செலவில் 25 சத வீதம் வசூலிக்கப்படும். எஞ்சிய தொகையாக ரூ. 3,000 பயனடைபவர்களிடமிருந்து வசூலிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. இத் தொகையை மூலதனக் கணக்கிலிருந்து வருமானக் கணக்கிற்கு மாற்றவேண்டும்.

இந்த மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 30,53,000 ஒதுக்கப்படுவதை இம் மன்றம் ஏற்கவேண்டுமென்று வேண்டுகிறேன்.

இணைப்பு V

[257-ம் பக்கத்திலுள்ள அடிக் குறிப்பைக் காண்க]

தமிழ் நாட்டில் நகர நீர்வழங்கு ஏற்பாடு—கழிவு நீர் அகற்று திட்டங்கள் குறித்து பொது சுகாதாரப் பொறியியல் துறை மேற்கொண்ட நடவடிக்கைகள் மீதான அறிக்கை.

1. முன்னுரை.

நீர் வழங்கு-கழிவு நீர் அகற்று ஏற்பாடுகள் தமிழ்நாட்டில் சென்ற நூற்றாண்டின் இறுதியிலேயே தொடங்கப்பட்டன. 1890-ம் ஆண்டு தொடங்கி 1946-ம் ஆண்டு வரையில் தமிழ்நாட்டில் தற்போது சேர்க்கப் பட்டுள்ள பல்வேறு மாவட்டங்களில் நகர நீர் வழங்கு-கழிவு நீர் அகற்று ஏற்பாடுகளுக்காக ரூ. 300 லட்சமே செலவிடப்பட்டது. நீர் வழங்கு திட்டங்கள் 36 நகராட்சிகளிலும் 2 பேரூராட்சிகளிலும் செயல்பட்டு வந்தன. 3 நகராட்சிகளில் மட்டுமே புதைச்சாக்கடை அகற்று ஏற்பாடுகள் செயலில் உள்ளன. ஒரு சில பகுதிகளில் மட்டுமே பயன்பட்டு வந்த கழிவு நீர் அகற்று ஏற்பாடுத்திட்டம் 6 நகராட்சிகளிலும் 2 பேரூராட்சிகளிலும் செயல்பட்டு வந்தன. ஏறத்தாழ இத்திட்டங் களனைத்தையும் மேம்படுத்தவும் விரிவுபடுத்தவும் வேண்டிய அவசிய மிருந்தது. அரசால் நியமிக்கப்பட்ட நீர் வழங்கு-கழிவு நீர் அகற்று ஏற்பாட்டுக் குழு ஒன்று 1947-ம் ஆண்டில் தமிழ்நாட்டில் நீர் வழங்கு-கழிவு நீர் அகற்றுத் திட்டம் குறித்த பல்வேறு கூறு களையும் ஆராய்ந்து திட்டவட்டமான பரிவுரைகளைச் செய்தது. இக் குழுவின் பரிவுரைகளையொட்டி நகர்ப்பகுதிகளில் 20 ஆண்டுகளுக்குள் நீர் வழங்கு-கழிவு நீர் அகற்று திட்டங்கள் வகை செய்யப்படவேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. முதற்படியாக, இக்குழு, தயாரித்த முதன்மை வரிசைப் பட்டியலும் தேவைப் பட்டியலும் ஏற்றுக் கொள்ளப்பட்டன. குழு தயாரித்த வரிசைப் பட்டியலையொட்டியே பல்வேறு நீர் வழங்கு-கழிவு நீர் அகற்று ஏற்பாடுகள் குறித்த ஆய்வு வேலை மேற்கொள்ளப்பட்டது.

2. நிறுவனமும் நிர்வாக அமைப்பும்.

நீர் வழங்கு-கழிவு நீர் அகற்று ஏற்பாடுகளுக்கு வகை செய்வது அந்தந்த உள்ளாட்சி மன்றங்களின் பொறுப்பு என்றாலும் நீர் வழங்கு-கழிவு நீர் அகற்று திட்டங்களைக் குறைந்த செலவில் மன நிறைவு தரும் வகையில் தக்க தரத்தில் நிறைவேற்ற முழுவதும் பயிற்சி பெற்ற, அனுபவம் மிகுந்த தொழில் நுட்ப பணியாளர்கள் கொண்ட திறமையான நிறுவனமொன்று அரசின் வசம் இருப்பது அவசியமாகும்.